# விலங்குப் பண்ணை (ANIMAL FARM)

**மூலம்:**
எறிக் ஆர்தர் பிளெயர்
(ஜோர்ஜ் ஓர்வெல்)



**தமிழாக்கம்:**
கந்தையா குமாரசாமி
(நல்லைக்குமரன்)

19

விலங்குகளுக்கு ஏதாவது சகிக்க முடியாத சங்கடங்கள் இருக்குமாயின் அவைகளைப் பொறுத்துக்கொள்வதற்கு முன்னைய காலத்திலிருந்தது போலல்லாமல் இன்றைய காலகட்டத்தில் அவை பெற்றுள்ள சுயகௌரவமானது பாதிப்பில் ஓரளவு பங்கையாவது நிவர்த்திக்கக் கூடியதாயிருக்கும் எனக் கருதப்பட்டது. அதிக சங்கீதக் கச்சேரிகள் பற்பல சொற்பொழிவுகள் சிற்சில ஊர்வல ஆரவாரங்கள் இருந்தன. விலங்குப்பண்ணையின் வீரப்பிரதாபங்கள் போராட்டங்களை நினைவுபடுத்து முகமாக வாரமொருமுறை திடீர் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவேண்டுமென நெப்போலியன் ஆணை பிறப்பித்தது. குறிக்கப்பட்ட நேரத்தில் தங்கள் வேலை ஸ்தலங்களை விட்டு வெளியேறி இராணுவ அணிவகுத்துப் பன்றிகள் தலைமையில் முறையே குதிரைகள் பசுமாடுகள் செம்மறியாடுகள் பின்னர் கோழிகள் பண்ணையின் எல்லைக்கு உட்பட்ட பகுதியைச் சுற்றிப் பவனி வந்தன. ஏவல் நாய்கள் பக்கத்தில் பாதுகாப்பளித்துக் கொண்டுவர நெப்போலியனின் கருமைநிறமான சேவல் சகல விலங்குகளுக்கும் முன்னதாகவே கட்டியக்காரனாக நடைபயின்றது. தோழர் நெப்போலியன் நீடூழி வாழவேண்டும் என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பச்சை நிற பதாகையில் விலங்கின் கொம்பு குளம்புப் பட அடையாளங்கள் காணப்பட்டன. அதை பொக்சரும் குளோவரும் இருபக்கத்தில் நடந்த வண்ணம் கொண்டு சென்றன. அதன் பின்னர் நெப்போலியனைப் போற்றிக் கௌரவிக்கும் பாடல்கள் இசைக்கப்பட்டன. ஸ்குவீலர் பன்றி நவதானிய விளைச்சலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் சம்பந்தமான பிந்திய புள்ளிவிவரங்களை எடுத்து விரிவாகக் காண்பித்துச் சொற்பொழிவாற்றியது. அத்தருணத்தில் மரியாதையின் நிமித்தம் துப்பாக்கி வேட்டுடொன்று தீர்க்கப்பட்டது. செம்மறியாடுகள் தான் திடீர் ஆர்ப்பாட்டத்தின் விசுவாசிகள். எந்த விலங்காவது தனது நேரத்தை வீணாகச் செலவழிப்பதாகவும் குளிரில் அநாவசியமாக நெடுநேரம் நிற்பாட்டி வைத்திருப்பதாக முறைப்பாடு செய்யும் பட்சத்தில் அதன் எதிர்ப்புக் குரல் செம்மறியாடுகளால் நாலுகாலுள்ளவை நல்லவை இரண்டு காலுள்ளவை தீயவை என்ற சுலோகத்தைப் பலத்த கத்தல் மூலம் மூழ்கடிக்கும்! சில விலங்குகள் பன்றிகள் அல்லது நாய்கள் தங்கள் அருகில் இல்லாத சமயம் எதிர்ப்புக் குரல் எழுப்பின.

எனினும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கப் போனால் விலங்குகள் இந்தக் கொண்டாட்டங்களை வரவேற்று மகிழ்ந்தன. உண்மையில் தாங்களே பண்ணையின் சொந்தக்காரர்கள் என்பதை ஞாபகப்படுத்தியவுடன் அது எவ்வளவு மனத்துக்கு இதமானதாக இருந்தது என்றும் தாங்கள் பாடுபட்ட உழைப்பு தங்களின் சொந்த நன்மைக்காகவே என்று விலங்குகள் திருப்தியடைந்தன. பாடல்கள் இசைப்பதாலும் ஊர்வலங்கள் நடாத்துவதாலும் புள்ளிவிபரப் பட்டியல்களை ஸ்குவீலர் சமர்ப்பிப்பதாலும் துப்பாக்கி முழங்குவதாலும் சேவல் கூவுவதாலும் கொடி பறப்பதாலும் மனத்திருப்தியடைந்த விலங்குகள் தங்கள் வயிறுகள் சில வேளைகளில் பட்டினியாயிருப்பதைக்கூட மறக்கக்கூடியதாயிருந்தது.

சித்திரை மாதத்தில் விலங்குப் பண்ணை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அக்குடியரசுக்கு ஒரு ஜனாதிபதியை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்கு ஒரேயொரு அபேட்சகர் நெப்போலியன் மட்டும் போட்டியிட்டதால் அது ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது. அதே நாளில் ஸ்னோபோல் ஜோன்ஸ்சுடன் தவறான திட்டங்களில் பங்குபற்றியதற்கான மேலதிக தகவல்கள் கொண்ட புதிய இரகசிய பத்திரங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டது. பசுமாட்டுத் தொழுவப் போரின்போது ஸ்னோபோலானது விலங்குகள் முன்னர் எண்ணியபடி தோல்வியுற்றதாகப் பின்வாங்கியது யுத்த தந்திரோபயப் பின்வாங்கல் அல்ல அது ஜோன்ஸ் பக்கம் பகிரங்கமாகவே சாய்ந்து போராடியதொன்றாகும். உண்மையில் ஸ்னோபோலே மானிடவர்க்கத்தின் நம்பகத்தன்மையுள்ள முதல்வாதலால் மானிடம் நீடூழி வாழ்க என்ற வார்த்தைகள் உதடுகளில் ஒலிக்க யுத்த களத்தில் மோதலில் ஈடுபட்டது. சில விலங்குகள் கண்டதாக நினைவில் வைத்துக்கொண்ட ஸ்னோபோலின் முதுகில் காணப்பட்ட காயங்கள் நெப்போலியனின் பற்கள் ஏற்படுத்திய காயங்களாகும்.

கோடைக்கால மத்தியில் மோசஸ் என்ற அண்டங்காக்கை விலங்குப்பண்ணையில் பல வருட இடைவெளிக்குப் பின்பாகத் திடீரென மீண்டும் தோன்றியது. அதனிடம் எவ்வித மாற்றமுமிருக்கவில்லை. எவ்வித வேலையும் செய்யாமல் அது எப்போதும் போலக் கற்கண்டு மலையைப்பற்றிப் பேசிக்கொண்டு தன் பிறவிக் குணத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தது. அது மரக்குற்றியில் எச்சம் போட்டபடி தனது கருமையான சிறகுகளைப் படபடவென அடித்து அதன் பேச்சைக் கேட்பவர்களோடு மணித்தியாலக்கணக்கில் பேசிக் கொண்டிருக்கும். தனது வளைந்த மூக்கால் வானத்தைப்பயபக்தியுடன் சுட்டிக் காண்பித்தபடி தோழர்களே! அங்கே உயரப் பாருங்கள். அந்தக் கரும் முகில் படலத்துக்கு அப்பால் உள்ள எதிர்ப்பக்கத்தில் கற்கண்டு மலை இருக்கின்றது. ஏழைப் பிராணிகளான நாங்கள் வாழ்ந்து கெட்ட இறுதிக் காலத்தில் அங்கேதான் நிரந்தரமாகத் தங்கப்போகின்றோம்! தான் அதி உயர்வாகப் பறந்த சமயங்களில் ஒருமுறை நிரந்தரமான நறுமணம் கமழும் வெளீர் சிகப்பு பஷ்பங்களை உடைய செடிகள் உள்ள வயல்களையும் ஆளிவிதைப்பலகாரங்களும் கற்கண்டுக் கட்டிகளும் அங்குகுள்ள புதர்களில் வளர்வதைக் கண்டதாகவும் அது உரிமை கொண்டாடியது. விலங்குகளில் பெரும்பாலானவை அதன் பேச்சை நம்பின. தங்கள் வாழ்க்கை இப்பொழுது பட்டினிகிடந்தும் சலியாமல் உழைத்தும் துன்பமயமாக இருப்பதால் வேறெங்காவது ஒரு சிறந்த உலகம் இருக்கின்றது என்று ஒப்புக்கொள்வது விவேகமான ஒன்றா ? என்று விலங்குகள் விவாதித்தன. பன்றிகளுக்கும் அண்டங்காக்கைகளுக்கும் உள்ள மனோபாவத் தொடர்பை மட்டும் அவைகளால் தீர்மானிப்பது கஷ்டமாயிருந்தது. விலங்குகள் அண்டங்காக்கையின் கற்கண்டுமலைபற்றிய கதைகள் யாவும் சுத்தப்பொய்கள் என்று அலட்சியப்படுத்தியபோதிலும் அதனை உழைப்பில் ஈடுபடாமல் நாளொன்றுக்கு கால்முகத்தலளவைப் பியர் விகிதம் படியாகக் கொடுத்து பண்ணையில் தங்க அனுமதித்தன.

பொக்சரின் கால் குளம்புக்காயம் குணமானபின்னர் அது எப்போதுமில்லாத வகையில் பாடுபட்டு வேலை செய்தது. அந்த வருடம் முழுவதும் சகல விலங்குகளும் அடிமைகள் போலவே வேலை செய்தன. காற்றாடி யந்திரக் கட்டிடம் திரும்பிக் கட்டப்படவேண்டும் என்பதோடு வழமையான பண்ணைவேலைகளோடு பங்குனி மாதம் ஆரம்பிக்கப்பட்ட பன்றிக்குட்டிகளுக்கான பள்ளிக்கூடம் அமைக்கும் பணியும் இருந்தன. சில சமயங்களில் உணவுப் பற்றாக்குறை காரணமாகப் பல மணிநேரங்களாகப் பட்டினியால் வாடியபோதிலும் பொக்சர் தைரியத்தை இழக்கவில்லை. பொக்சர் சொல்லாலோ செயலாலோ தனது உடல் பலம் முன்னரிலும் பார்க்க குறைவானதாகக் காட்டிக்கொள்ளவில்லை. அதனுடைய தோற்றத்தில் மட்டும் சிறிதளவு மாற்றம் தென்பட்டது. அதன் தோல் முன்போல் சிறிது பிரகாசம் குறைந்து பாரிய இடுப்பும் புட்டமும் சேர்ந்த பகுதிகள் சுருங்கியதாகத் தென்பட்டன. வசந்த காலத்தில் புற்கள் துளிர்த்தும் பொக்சர் உடல்தேறிவிடும் என்று மற்ற விலங்குகள் கூறின. ஆனாலும் வசந்த காலப் புற்கள் துளிர்த்தாலும் பொக்சர் மொத்தமாக வரவில்லை. மலைக்குன்றின் உச்சியை நோக்கிச் செல்லும் சரிவில் பாரமிக்க பெருங்கூழாங்கல்லை இறுக்கிப் பிடித்துத் தனது பராக்கிரமத்தைக் காண்பிக்கும் சமயங்களில் அதனுடைய கால் வலிமையாலன்றி தொடர்ந்து உழைக்கவேண்டும் என்ற திடசங்கற்பமிக்க மன ஓர்மத்தாலேயே அங்ஙனம் செயற்படுவதாகத் தென்பட்டது. நான் இன்னும் நன்றாகப் பாடுபட்டு உழைப்பேன் என்ற சொற்களுக்கு மேல் எதுவும் அது சொல்லமாட்டாது. திரும்பவும் பெஞ்சமின் கழுதையும் குளோவர் பெண்குதிரையும் பொக்சரை அதன் உடலைப்பேணும்படி எச்சரித்தன. எனினும் அந்த எச்சரிக்கைகளைக் கவனத்தில் எடுக்கவில்லை. அதனுடைய 12வது பிறந்த தினம் நெருங்கிக் கொண்டிருந்தது. தான் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுமுன்னதாக பெருந் தொகையான கற்களைச் சேமிக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் அதனால் தனக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று கருதிச் செயற்பட்டது.

கோடைகாலத்தில் ஒரு நாள் மாலை பொக்சருக்கு ஏதோ நடந்துவிட்டது என்றொரு திடீரச்செய்தி விலங்குப் பண்ணையெங்கும் உலாவியது. மலைக்குன்றிலிருந்து ஒரு வண்டி பாரமான கல்லைத் தனியே கீழேயுள்ள காற்றாடியந்திரக் கட்டட இடத்துக்கு இழுத்துவர பொக்சர் சென்றது. அந்தச்செய்தியில் நிட்சயமாக உண்மை இருக்கத்தான் செய்தது. பொக்சர் கீழே விழுந்துவிட்டது. அது சரிந்து கிடக்கின்றது. அதனால் எழுந்திருக்க முடியவில்லை என்று ஒரு சில நிமிடங்களில் இரண்டு புறாக்கள் அந்தச் செய்தியுடன் விரைந்தோடி வந்தன! பண்ணையிலுள்ள விலங்குகளில் அரைவாசிப் பங்கினர் காற்றாடி யந்திரக் கட்டிடம் இருந்த உயரமான இடத்தை நோக்கி விரைந்து சென்றன. வண்டியின் நுகத்துக்கு இடையே கழுத்தை உயர்த்த முடியாமல் தலையை நீட்டிப் படுத்தபடி கிடந்தது. அதனுடைய கண்கள் பளபளப்பாகக் காணப்பட்டு அதன் உடலின் இருபக்கங்களும் வியர்வையால் தோய்ந்திருக்கக் காணப்பட்டன. மெல்லிய இரத்தம் அதன் வாயிலிருந்து சிறுதாரையாக வெளிவந்துகொண்டிருந்தது. குளோவர் பெண்குதிரை தனது முழங்கால்களில் நின்றுகொண்டது.

பொக்சர்! என்ன செய்கிறது ? என்று கேட்டுக் கதறியது.

அது எனது இருதயம் என்று மிருதுவான குரலில் பொக்சர் சொன்னது. நான் இல்லாமல் நீங்கள் காற்றாடி யந்திரக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க உங்களால் முடியும் என நான் நம்புகின்றேன். ஓரளவு போதுமான கற்கள் சேகரிக்கப்பட்டு சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. என்னதானிருந்தாலும் போவதற்கு இன்னும் எனக்கு ஒரு மாதம் மட்டும்தான் உண்டு. உண்மையைக் கூறப்போனால் நான் எனது ஓய்வை எதிர்பார்த்துக் கொண்டுதானிருந்தேன். பெஞ்சமினுக்கும் வயதாகி வருவதால் அதே சமயத்தில் ஓய்வுபெற்று எனக்கு உதவியான நண்பனாக இருந்திருக்கலாம்.

நாங்கள் உடனடியாக உதவியை நாடிப் பெறவேண்டும். ஓடுங்கள். யாராவது ஸ்குவீலரிடம் போய் நடந்ததைச் சொல்லுங்கள் என்று குளோவர் கூறியது. அந்தச் செய்தியை ஸ்குவீலரிடம் தெரிவிப்பதற்காக மற்றைய விலங்குகள் பண்ணைக்குத் திரும்ப விரைந்து சென்றன. குளோவர் பெண்குதிரை போகவில்லை. பெஞ்சமின் கழுதையும் அதனருகே படுத்து இருந்தபடி எதுவுமே பேசாமல் இலையான்கள் பொக்சரை மொய்க்காமல் தனது வாலால் விரட்டிக் கொண்டிருந்தது. மிகுந்த கவலையுடனும் அனுதாபத்துடனும் ஸ்குவீலர் அண்ணளவாகக் கால் மணித்தியாலத்தின் பின்னர் தோன்றியது. பண்ணையில் காணப்படுகின்ற விலங்குகளில் மிகுந்த விசுவாசமுள்ள ஒன்றுக்கு இத்தகைய துரதிர்ஷ்டமான சம்பவம் நேர்ந்துவிட்டது என்று அறிந்தவுடன் தோழர் நெப்போலியனுக்குப் பலத்த துயரத்தை ஏற்படுத்திமிருப்பதாக ஸ்குவீலர் பன்றி தெரிவித்தது. அத்தோடு நெப்போலியன் பொக்சரை விலிங்டனிலுள்ள ஆஸ்பத்திரியில் சேர்த்துக் குணமாக்குவதற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே கவனித்துவிட்டதாகவும் கூறியது. இந்த ஏற்பாட்டைக் கேட்டதுமே விலங்குகள் மத்தியில் ஒருவித சலசலப்புத் தோன்றியது. மொல்லிக்குதிரையையும் ஸ்னோபோல் பன்றியையும் தவிர வேறு எந்த விலங்கும் பண்ணையைவிட்டுச் சென்ற சரித்திரமிருக்கவில்லை. விலங்குகள் மானிடர்களின் தயவு தாட்சண்யத்தில் சுகயீனமுற்றிருக்கும் தோழர் பொக்சர் இருப்பதை எள்ளளவும் விரும்பவில்லை. எனினும் விலிங்டனிலுள்ள மிருக வைத்தியர் பண்ணையில் கிடைக்கக்கூடிய வைத்தியத்திலும் பார்க்க மிகவும் திருப்தியளிக்கக்கூடிய முறையில் குணப்படுத்துவார் என்று சொல்லி ஸ்குவீலர் விலங்குகளை இலகுவாகச் சமாதானப்படுத்தியது. அரை மணித்தியாலத்தின் பின்னர் பொக்சர் ஓரளவு குணமாகியதும் தன் கால்களில் எழுந்து நிற்பதற்குத் தட்டுத் தடுமாறியது. அதனால் பின்னர் ஒருவாறு எழுந்து நொண்டியபடி தனது தொழுவத்துக்கு மெல்ல மெல்லச் செல்ல முடிந்தது. தொழுவத்தில் குளோவரும் பெஞ்சமினும் சேர்ந்து பொக்சருக்கு வைக்கோலாலான அருமையான படுக்கை யொன்றைத் தயாரித்து வைத்திருந்தன.

அடுத்த இரண்டு நாட்களும் பொக்சர் தொழுவத்திலேயே தங்கியிருந்தது. பன்றிகள் குளியலறை மருந்துப் பெட்டிக்குள் காணப்பட்ட இளம் சிகப்பு நிறமுள்ள மருந்துப்போத்தல் ஒன்றை அனுப்பியிருந்தன. சாப்பாட்டுக்குப் பின்பாக நாளொன்றுக்கு இருமுறை அந்த மருந்தைக் குளோவர் அளவுப்பிரமாணமாகப் பொக்சருக்குக் கொடுத்தது. மாலை நேரங்களில் தொழுவத்தில் பெஞ்சமின் இலையான்களைத் துரத்திக் கொண்டிருக்கக் குளோவர் பொக்சரின் தொழுவத்தின் அருகில் படுத்திருந்து கதைத்துக் கொண்டிருக்கும். பொக்சர் நடந்து முடிந்த சம்பவத்தைவிட்டுக் கவலை கொள்ளவேண்டாமென்று வெளிப்படையாகவே தெரிவித்துக் கொண்டது. தான் நல்லவகையில் குணமாகும் பட்சத்தில் இன்னும் 3 வருடங்கள் உயிர் வாழலாம் என்றும் மூலையிலுள்ள பெரிய புல்வெளியில் தன் காலத்தை அமைதியாகச் செலவிட எண்ணியுள்ளதாகவும் கூறியது. தான் படித்துத் தன் உள்ளத்தைச் சீர்படுத்தத்தக்க ஓய்வு காலம் இதுவே ஆரம்பமென்றும் கூறியது. விலங்குகள் பாஷையின் மிகுதி 22 எழுத்துக்களையும் கற்பதில் ஈடுபடுவதே தனது இறுதிக்கால எண்ணமும் அபிலாஷையுமென்றும் அது தெரிவித்தது.



(தொடரும்)